DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No. 19/2024**

அ.சா.14

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | கோபிநாத் | Caste: | |
| Father's Name: | குப்புசாமி | Calling: | கண்காணிப்பாளர், மாவட்ட ஆட்சி தலைவர் அலுவலகம் |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | 59 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 29.07.2025

( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டனர்.)

**முதன்மை விசாரணை**

நான் தற்போது சிவகங்கை மாவட்ட ஆட்சி தலைவர் அலுவலகத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அலுவலகத்தில் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.03.2024 ம் தேதி நான் சிவகங்கை மாவட்டம் இளையான்குடி வட்ட வட்டாட்சியராக பணியாற்றினேன். 23.03.2024 ம் தேதி இளையான்குடி வட்டம் கீழாயூர் கிராமத்தை சேர்ந்த தனிக்கொடி மகன் முருகவேல் என்பவர் இணைய வழியாக சாதி சான்றிதழ் கேட்டு விண்ணப்பித்திருந்தார். அவர் பட்டியல் இனத்தை சேர்ந்த இந்து புதிரை வண்ணான் சமூகத்தை சேர்ந்தவர் என நான் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் பரிந்துரைத்ததன் பேரில் மேற்படி சாதி சான்றிதழ் வழங்க உத்தரவு வழங்கினேன். இதுசம்பந்தமாக டிஎஸ்பி என்னை விசாரித்தார். நான் இணைய வழியாக வழங்கிய சாதிச் சான்றிதழ் **அ.சா.ஆ.15**.

**2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

நான் எத்தனை நாட்களில் சாதி சான்றிதழ் வழங்கினேன் என்றால் 2 நாட்கள். நான் முருகவேல் புதிரை வண்ணான் வகுப்பை சேர்ந்தவர் என எப்படி தெரிந்துகொண்டேன் என்றால் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் விசாரணை செய்துகொடுத்த அறிக்கையின் அடிப்படையில். நான் நேரடியாக விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் வழங்கிய பரிந்துரையின் அடிப்படையில் தான் சாதிச்சான்றிதழ் வழங்கினேனா என்றால் சரிதான். மேற்படி முருகவேல் இந்து புதிரை வண்ணான் வகுப்பை சேர்ந்தவர் இல்லை என்றும், டிஎஸ்பி கேட்டுக்கொண்டதால் சான்று வழங்கினேன் என்றால் சரியல்ல.

**3 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

இணைய வழியாக சாதி சான்றிதழ் கேட்டு விண்ணப்பிக்கும்போது ஆவணங்களுடன் தான் விண்ணப்பிப்பார்கள். என்னன்ன ஆவணங்கள் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்திருந்தார் என்றால் ஆதார் அட்டை, குடும்ப அட்டை, அவர் ஏற்கனவே வாங்கியிருந்த சாதி சான்றிதழ். நான் இணைய வழியாக கொடுத்த சாதி சான்றிதழுடன் மேற்படி முருகவேல் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆதார் அட்டை, குடும்ப அட்டை , அவர் ஏற்கனவே வாங்கியிருந்த சாதி சான்றிதழ் நகல் ஆகியவற்றையும் சேர்த்து கொடுக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி முருகவேல் விண்ணப்பிக்கும்போது எந்த வேலை பார்ப்பதாக விண்ணப்பத்தில் கூறியிருந்தார் என்றால் கூலிவேலை, என கூறிவிட்டு சாட்சி மீண்டும் போலிசாக வேலை பார்ப்பதாக கூறுகிறார். அவர் காவல்துறையில்

பணிபுரிந்தால் பணிபுரிந்ததற்கான அடையாள அட்டையை மேற்படி ஆவணங்களுடன் சேர்த்திருப்பேன் என்றும் இல்லை என்பதால் தான் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. சாதி சான்றிதழ் வழங்க நாங்கள் எவ்வளவு நாட்கள் எடுத்துக்கொள்வோம் என்றால் 7 நாட்கள். இரண்டு நாட்களில் யாருடைய நிர்பந்தத்தின்பேரில் கொடுத்தேனா என்றால் இல்லை. நாங்கள் எந்த விசாரணையும் செய்யாமல் எங்கள் அலுவலகத்தில் விஏஓ, வருவாய் ஆய்வாளர் ஆகியோர்களை உட்கார வைத்து அறிக்கை பெற்று சா்தி சான்றிதழ் வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கமுதி டிஎஸ்பி கொடுத்த அழுத்தத்தின்பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

நான் எவ்வளவு காலமாக வட்டாட்சியராக இருந்தேன் என்றால் ஒன்றரை வருடங்கள். இளையான்குடி வட்டத்தில் எத்தனை கிராமங்கள் உள்ளன என்பது தெரியுமா என்றால் 52 கிராமங்கள். ஒவ்வொரு கிராமங்களிலும் எந்தந்த சாதியை சேர்ந்த மக்கள் எவ்வளவு பேர் வசித்து வருகிறார்கள் என்பதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. நான் சாதி சான்றிதழ் கிராம் நிர்வாக அலுவலர் அறிக்கை கொடுத்து அதன் அடிப்படையில் வருவாய் ஆய்வாளர் அறிக்கை கொடுத்து அதனடிப்படையில் நான் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் கொடுத்த சாதி சான்றிதழுக்கு அடிப்படை ஆவணம் கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த அறிக்கை என்றால் சரிதான். கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த அறிக்கையை நான் கொடுத்த சாதி சான்றிதழுடன் இணைக்கவில்லை

என்றால் சரிதான். நான் கொடுத்த சாதி சான்றிதழ் உண்மையானது அல்ல என்றும் போலிசார் கொடுத்த அழுத்தத்தின் பேரில் வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

Sd/- C. Mohanram,
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED
UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No. 19/2024**

அ.சா.15

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | பாண்டி சங்கர்ராஜ் | Caste: | |
| Father's Name: | காமாட்சி | Calling: | பறக்கும்படை தனி வட்டாட்சியர் , குடிமை பொருள் வழங்கல் மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர் |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | 45 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 29.07.2025

( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டனர்.)

**முதன்மை விசாரணை**

நான் தற்போது விருதுநகர் மாவட்டம் குடிமை பொருள் வழங்கல் மற்றும கண்காணிப்பு துறை தனி வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு விருதுநகர் மாவட்டம் திருச்சுழி வட்டாட்சியராக பணிபுரிந்தேன். கடந்த 25.03.2024 ம் தேதி கமுதி காவல் ஆய்வாளரிடமிருந்து திருச்சுழி வட்டம் அம்மன் பட்டி கிராமத்தை சேர்ந்த வெற்றிவேல் மகன் அஜித் என்ற விக்னேஷ்வரன் என்பவரது சாதி தொடர்பாக அறிக்கை கோரி கடிதம் வரப்பட்டது. அதனடிப்படையில் அம்மன் பட்டி கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வீரசோழன் வருவாய் ஆய்வாளர் ஆகியோர்களிடம் அறிக்கை பெற்றும் மேற்படி நபர் இந்து மறவர் சாதியை சேர்ந்தவர் என்ற 26.03.2024 ம் தேதி அறிக்கை வழங்கினேன். மறவர் சாதி இந்து அட்டவணைப்படுத்தப்படாத பிரிவில்

அடங்கும். என்னிடம் காட்டப்படும் அறிக்கை நான் கொடுத்ததுதான். அந்த அறிக்கை **அ.சா.ஆ.16**. இதுசம்பந்தமாக டிஎஸ்பி என்னை விசாரித்தார்.

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் கொடுத்த அறிக்கைகளை நான் கொடுத்த அறிக்கையுடன் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான். அந்த அறிக்கைகள் என்னுடைய அலுவலக கோப்பில் உள்ளது. கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் கொடுத்த அறிக்கைகள்தான் நான் கொடுத்த சான்றுக்கு ஆதாரம் என்றால் சரிதான். நான் சொன்னதுபோல் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் எந்த அறிக்கைகளும் என்னிடம் கொடுக்கவில்லை என்றும் நான் போலிசார் கொடுத்த அழுத்தத்தின்பேரில் எந்த அறிக்கையும் பெறாமல் சாதி சான்று வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

**2,3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்து தனியாக குறுக்கு விசாரணை செய்யவில்லை.

Sd/- C. Mohanram,
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No. 19/2024**

அ.சா.16

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | முத்துமாரி | Caste: | |
| Father's Name: | சுகுமாறன் | Calling: | தலைமை காவலர், கமுதி காவல்நிலையம் |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | 35 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 29.07.2025

( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டனர்.)

**<u>முதன்மை விசாரணை</u>**

நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் கமுதி காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 31.01.2024ம் தேதி நானும் கமுதி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் த.காவலராக பணிபுரிந்த 1058 அன்னபூரணம் ஆகிய இருவரும் கமுதி காவல்நிலைய ஆய்வாளர் கொடுத்த கடவுச்சீட்டை பெற்றுகொண்டு கமுதி காவல்நிலைய கு.எண். 37/2024 வழக்கில் பாதிக்கப்பட்ட தாமரை செல்வி ,க/பெ. முனியசெல்வம், தோப்படைபட்டி என்ற பெண்ணை மருத்துவ பரிசோதனைக்காக இராமநாதபுரம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு வேண்டுகோள் கடிதத்துடன் 01.02.2024ம் தேதி ஆஜர்படுத்தினோம். மருத்துவ பரிசோதனை முடித்து 02.02.2024ம் தேதி மருத்துவர் விடுவித்தார். ஆய்வாளர் உத்தரவுப்படி பாதிக்கப்பட்ட பெண்ணான தாமரை செல்வியை 02.02.2024ம் தேதி கமுதி காவல் நிலையத்தில் ஒப்படைத்தோம். பின்பு 28.02.2024ம் தேதி கமுதி

நீதித்துறை நடுவர் உத்தரவுப்படி அவருடைய கடிதத்துடன் இராமநாதபுரதம் மருத்துவமனையில் மருத்துவரால் பாதிக்கப்பட்ட பெண்ணிடமிருந்து மருத்துவ பரிசோதனைக்காக எடுக்கப்பட்ட தடய மாதிரிகளை பெற்று இராமநாதபுரம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தேன். ஒப்படைத்த பிறகு ஒப்படைத்தற்கான ஒப்புகை சீட்டு பெற்று ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். இதுசம்பந்தமாக டிஎஸ்பி என்னை விசாரித்தார்.

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆய்வாளர் மருத்துவ பரிசோதனைக்கு பாதிக்கப்பட்ட பெண்ணான தாமரை செல்வியை உட்படுத்த கடவுச்சீட்டு என்னிடம் கொடுத்தாரா என்றால் கொடுத்தார். அந்த கடவுச்சீட்டில் யாரை எங்கு மருத்துவ பரிசோதனைக்கு ஒப்படைக்க வேண்டும் என எழுதியிருக்கும் என்றால் சரிதான். அந்த பணி முடிந்து கடவுச்சீட்டை ஆய்வாளரிடம் ஒப்படைத்துவிட்டேன் என்றால் சரிதான். நான் சொன்னதுபோல் சொன்ன தேதியில், கமுதி காவல்நிலைய ஆய்வாளரால் நான் எந்த பணிக்கும் பணிக்கபடவில்லை என்றால் சரியல்ல.

**2,3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்து தனியாக குறுக்கு விசாரணை செய்யவில்லை.

Sd/- C. Mohanram,
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No. 19/2024**

அ.சா.17

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | பாண்டியராஜன் | Caste: | |
| Father's Name: | எட்டப்பன் | Calling: | முதல்நிலை காவலர், கமுதி காவல்நிலையம் |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | 35 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 29.07.2025

( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டனர்.)

**முதன்மை விசாரணை**

நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் கமுதி காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.02.2024ம் தேதி என்னுடன் பணிபுரியும் மு.நி.கா. 1724 விக்னேஷ், மு,நி.கா. 2160 வெங்கடேஷ் ஆகிய மூவரும் கமுதி காவல்நிலைய ஆய்வாளர் கொடுத்த கடவுச்சீட்டை பெற்று கமுதி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு கமுதி காவல்நிலைய கு.எண். 37/2024 வழக்கின் சம்பந்தப்பட்ட 1ம் எதிரி அஜித் என்ற விக்னேஷ்வரன், த/பெ. வெற்றிவேல் என்ற உடையப்பன், அம்மன்பட்டி, 2ம் எதிரி பாலகுமார் என்ற பாலமுருகன், த/பெ. சுந்தரபாண்டி, மறக்குளம் ஆகிய இருவரையும் மருத்துவ பரிசோதனைக்காக இராமநாதபுரம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு இராமநாதபுரம் மாவட்ட சிறையில் இருந்து அவர்களை 15.02.2024ம் தேதி பெற்று அன்றைய தினமே மருத்துவ பரிசோதனைக்காக மருத்துவமனையில் அனுமதித்தோம். 16.02.2024ம்

தேதி மருத்துவ பரிசோதனை முடித்து தக்க வழிக்காவலுடன் இராமநாதபுரம் மாவட்ட சிறையில் ஒப்படைத்தோம். பின்னர் கமுதி நீதித்துறை நடுவர் உத்தரவுப்படி மேற்படி எதிரிகளிடம் இருந்து இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் எடுக்கப்பட்ட விந்து மற்றும் இரத்தம் சீலிடப்பட்ட தடய பொருட்களை பெற்று இராமநாதபுரம் தடய் அறிவியல் துறையில் 13.03.2024 ம் தேதி ஒப்படைத்து அங்கு ஒப்புகை சீட்டு பெற்று கமுதி காவல்நிலையத்தில் ஒப்படைத்தேன். இதுசம்பந்தமாக டிஎஸ்பி என்னை விசாரித்தார்.

**1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**இல்லை**

Sd/- C. Mohanram,
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED
UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No. 19/2024**

அ.சா.18

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | பேபி இசக்கி பிரகதாம்பாள் | Caste: | |
| Father's Name: | கருணாநிதி | Calling: | சார்பு ஆய்வாளர், கமுதி அனைத்து மகளிர் காவல்நிலையம் |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | 43 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 29.07.2025

( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டனர்.)

**முதன்மை விசாரணை**

நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் கமுதி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 31.01.2024ம் தேதி கமுதி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக அலுவலில் இருந்தபோது கமுதி உட்கோட்ட காவல்துணைக்கண்காணிப்பாளர் அவர்களின் வாய்மொழி உத்தரவின்பேரில் கமுதி தாலுகாவை சேர்ந்த கோவிலாங்குளம் காவல்நிலைய சரகத்திற்குட்பட்ட நெறிஞ்சிப்பட்டி கிராமத்தை சேர்ந்த முனியசெல்வம் மனைவி தாமரை செல்வி என்பவர் கமுதி காவல்நிலையத்தில் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று புகார் மனுவின் தன்மைக்கேற்ப கமுதி காவல்நிலைய கு.எண். 37/2024 சட்டப்பிரிவுகள் 341, 294(b), 323, 392, 376 D, 506(ii) IPC ன்படி வழக்கு பதிவு செய்தேன் . நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.17**.

பின்பு புகார் மனு மற்றும் முதல் தகவ்ல அறிக்கையின் அசலை சம்பந்தப்பட்ட நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும், மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். பின்பு இவ்வழக்கில் பாதிக்கப்ப்டட பெண்ணை கமுதி அனைத்து மகளிர் காவல்நிலைய த.கா. 1058 திருமதி அன்னபூரணம், கமுதி காவல்நிலைய மு.நி.கா 480 திருமதி முத்துமாரி ஆகியோர்களுக்கு கடவுச்சீட்டு கொடுத்து வேண்டுகோள் கடிதத்துடன் இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனைக்கு மருத்துவ பரிசோதனைக்கு அனுப்பி வைத்தேன். என்னை ஆய்வாளர் விசாரித்தார்.

**1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் காவல்துணைக் கண்காணிப்பாளர் உத்தரவின் பேரில் வழக்கு பதிவு செய்தேன். அதனால் பாதிக்கப்பட்டதாக சொல்லப்படும் பெண் பாதிக்கப்பட்ட விவரம் எனக்கு முன்பே காவல்துணைக் கண்காணிப்பாளருக்கு தெரியும் என்றால் சரிதான். என்னிடம் எழுத்து மூலமாக புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த புகாரை யார் எங்கு வைத்து எழுதியது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. புகார் 31.01.2024 ம் தேதி கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். புகாரை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய எவ்வளவு நேரம் ஆனது என்றால் அரை மணி நேரம். கமுதி காவல்நிலையத்திலிருந்து கமுதி நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் சுமார் 2 கி.மீ. புகார் மனுவையும் முதல் தகவல் அறிக்கையையும் யார் மூலரம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றால் நீதிமன்ற பொறுப்பு காவலர் மூலம் அனுப்பி வைத்தேன். அவர் பெயர் ஞாபகமில்லை. காவல்துணைக்கண்காணிப்பாளர் என்னை விசாரிக்கும்போது புகார் மனுவையும் முதல் தகவல் அறிக்கையையும்

நீதிமன்ற காவலர் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் சொன்னதுபோல் நீதிமன்ற காவலர் மூலம் புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையை கமுதி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கவில்லை என்றால் சரியல்ல. கமுதி காவல்நிலையத்தில் இருந்து நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு இருசக்கர வாகனத்தில் சென்றால் 10 நிமிடமும், நடந்து சென்றால் அரை மணி நேரத்திற்குள்ளாகவும் சென்றுவிடலாம் என்றால் சரிதான். நான் சொன்னதுபோல் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் புகார் கொடுக்கப்படவில்லை என்றும் அதனடிப்படையில் நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. ஏற்கனவே ஒரு புகார் கொடுக்கப்பட்டது என்றும் அந்த புகாரில் எந்த விவரமும் இல்லாததால் அது மறைக்கப்பட்டது என்றால் சரியல்ல. 02.02.2024 ம் தேதி காலை 8.00 மணியளவில் கமுதி காவல் துணை கண்காணிப்பாளரின் அறிவுறுத்தலின் பேரில் ஒரு புகார் பெறப்பட்டு அதனடிப்படையில் அ.சா.ஆ.17 தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. காலதாமதமாக புகார் பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதால்தான் அந்த புகார் 02.02.2024 ம் தேதி அன்று நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு இரவு 10.30 மணியளவில் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. முதலில் கொடுத்த புகார் மறைக்கப்பட்டுவிட்டது என்றும் நான் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இப்படிக்கு என்று எழுதப்பட்டுள்ளதற்கும் புகார் விவரங்கள் எழுதப்பட்டுள்ளதற்கும் இடையில் நிறைய இடைவெளி உள்ளது என்றால் சரிதான். இப்படிக்கு என எழுதப்பட்டுள்ளதற்கும் அதற்கு கீழ் உள்ள கையெழுத்திற்கும் நிறைய இடைவெளி உள்ளது என்றால் சரிதான்.

என்னுடைய கையெழுத்தும் புகார்தாரரின் கையெழுத்தும் வெவ்வேறு பேனாக்களில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார்தாரரின் கையெழுத்தும் புகார் மனுவில் உள்ள வாசகங்களில் உள்ள கையெழுத்தும் வெவ்வேறு மையினால் உள்ளது என்றால் சரியல்ல. வெள்ளைப் பேப்பரில் புகார் கொடுத்ததாக சொல்லப்படும் நபரிடம் கையெழுத்து பெறப்பட்டு பின்னிட்டு வாசகங்கள் என்னால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**2,3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்து தனியாக குறுக்கு விசாரணை செய்யவில்லை.

Sd/- C. Mohanram,
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)